பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
10 06 2025 7 15
செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. செமிகண்டக்டர் உள்ளிட்ட மின்னணுப் பொருட்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்கான கொள்கைகளில் மத்திய அரசு தளர்வுகளை அறிவித்துள்ளது.

2. மும்பை ரயில் விபத்தைத் தொடர்ந்து, புதிதாக தயாரிக்கப்படும் புறநகர் ரயில் பெட்டிகளில் தானியங்கி கதவுகளைப் பொருத்த ரயில்வே துறை முடிவு செய்துள்ளது.

3. இஸ்தான்புல் ஒப்பந்தத்தை தொடர்ந்து, யுக்ரைனும் - ரஷ்யாவும் சிறைக் கைதிகளை பரஸ்பரம் ஒப்படைக்கும் நிகழ்வு தொடங்கியுள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

4. தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா உள்ளிட்ட மாநிலங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஆசியக் கோப்பை கால்பந்து தகுதிச் சுற்று இறுதியாட்டத்தில் இந்தியா இன்று ஹாங்காங்கை எதிர்கொள்கிறது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

செமிகண்டக்டர் உள்ளிட்ட உயர் தொழில்நுட்ப கருவிகளின் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்கான கொள்கைகளில் மத்திய அரசு பல்வேறு தளர்வுகளை அறிவித்துள்ளது.

உலகளாவிய செமிகண்டக்டர் உற்பத்தியில் இந்தியாவின் நிலையை வலுப்படுத்துவதற்கும், இந்தத் தொழிலில் உள்ள தடைகளை எளிதாக்குவதற்கும் அரசின் இந்த மாற்றங்கள் வழிவகுக்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மேலும் முதலீடுகளை அதிகரிப்பதற்கும் இது ஏதுவாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

செமிகண்டக்டர் அல்லது மின்னணு பொருட்கள் உற்பத்தி ஆலைக்கான இடம் 50 ஹெக்டேர் என்ற அளவில் இருந்து 10 ஹெக்டேராக குறைக்கப்பட்டிருப்பது மிக முக்கியமான மாற்றம் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீர் எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் குண்டுவீச்சில் சேதமடைந்த வீடுகளுக்கு கூடுதல் நிவாரணம் வழங்குவதற்காக 25 கோடி ரூபாயை உள்துறை அமைச்சகம் ஒதுக்கீடு செய்துள்ளது.

எல்லையோர மாவட்டங்களில் சேதமடைந்த வீடுகளுக்கு கூடுதல் இழப்பீடு வழங்கப்படும் என பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்ததைத் தொடர்ந்து 2 ஆயிரத்து 60 வீடுகளுக்கு நிவாரணத் தொகை வழங்க இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று உள்துறை அமைச்சக அறிக்கை தெரிவிக்கிறது.

முழுவதுமாக சேதமடைந்த வீடுகளுக்கு தலா 2 லட்சம் ரூபாயும், பகுதியளவு சேதமடைந்த வீடுகளுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும் வழங்கப்படும் என்று பிரதமர் அறிவித்திருந்தார்.

இதேபோல் பஞ்சாப் மாநில எல்லையில் சேதமடைந்த வீடுகளுக்கும் கூடுதல் நிவாரணத் தொகை வழங்கப்படும் என்று உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஃபிரான்ஸ் சென்றுள்ள மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங், யுனெஸ்கோவின் கடலோர பாதுகாப்பு ஆணையத்தின் நிர்வாக செயலாளர் திரு. **Vidar Helgesan**-ஐ சந்தித்து இருதரப்பு பேச்சுகள் நடத்தினார்.

கடல் பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பாக தாம் பேசியதாக திரு. ஜிதேந்திர சிங் பின்னர் தெரிவித்தார்.

பருவநிலை மாற்ற முன்னெச்சரிக்கை தகவல்கள் மற்றும் அது தொடர்பான ஆய்வுகளை மேம்படுத்துவது குறித்த இந்தியாவின் முன்முயற்சிகளை இந்த உரையாடலின்போது தாம் எடுத்துரைத்ததாகவும் திரு. ஜிதேந்திர சிங் குறிப்பிட்டார்.

<<<<>>>>

குஜராத் மாநிலம் அகமதாபாதில் ஃபின்லாந்து நாட்டின் புதிய துணைத் தூதரகம் தொடங்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கான ஃபின்லாந்து தூதர் திரு. **Kimmo Lahdevirta** இந்தத் தூதரகத்தை நேற்று திறந்து வைத்தார்.

இதன் மூலம் குஜராத் மாநிலத்துடனான ஃபின்லாந்து நல்லுறவை வலுப்படுத்த முடியும் என்றும், பல்வேறு தொழில் வளர்ச்சியை அதிகரிக்க முடியும் என்றும் குஜராத் மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மகாராஷ்டிர மாநிலம் மும்பை அருகே நேற்று ஏற்பட்ட ரயில் விபத்தைத் தொடர்ந்து, புதிதாக தயாரிக்கப்படும் புறநகர் ரயில் பெட்டிகளில் தானியங்கி கதவுகளைப் பொருத்த ரயில்வே துறை முடிவு செய்துள்ளது.

மும்பை புறநகர் ரயில்களில் தினமும் சராசரியாக 75 லட்சம் பேர் பயணம் செய்வதைக் கருத்தில் கொண்டு, விபத்துகளைத் தவிர் க்க தானியங்கி கதவு வசதியை உறுதி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே வாரிய நிர்வாக இயக்குநர் திரு. திலீப் குமார் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே **Diwa – Mumbra** இடையேயான புறநகர் ரயிலில் இருந்து தவறி விழுந்ததால் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 5ஆக அதிகரித்துள்ளது.

இந்த விபத்து குறித்து விசாரணை நடத்த ரயில்வே அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

<<<<>>>>

எல்லைதாண்டிய தீவிரவாதத்திற்கு தீர்வு காணும் வரை பாகிஸ்தானுடன் சிந்து நதிநீர் ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தை நடைபெறாது என்று இந்தியா திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

ஜம்மு-கஷ்மீரின் பஹல்காமில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து சிந்து நதிநீர் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது.

மேலும் பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு-கஷ்மீரில் உள்ள தீவிரவாத முகாம்கள் மீது ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை மூலம் இந்தியா தாக்குதலை மேற்கொண்டது.

இந்த நிலையில் எல்லைதாண்டிய தீவிரவாதம் தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரை பாகிஸ்தானுடன் எந்தவொரு பேச்சுவார்த்தையிலும் இந்தியா ஈடுபடாது என உறுதியுடன் உள்ளதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

இஸ்தான்புல் நகரில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை தொடர்ந்து யுக்ரைனும் – ரஷ்யாவும் சிறைக் கைதிகளை பரஸ்பரம் ஒப்படைக்கும் நிகழ்வு தொடங்கியுள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 25 வயதுக்கு உட்பட்ட கைதிகள் அடங்கிய முதல் குழுவினர் கீவ் நகரில் இருந்து ரஷ்யா திரும்பியிருப்பதாக கூறினார்.

இதேபோல் யுக்ரைன் ராணுவத்தைச் சேர்ந்த இதே எண்ணிக்கையிலானோர் அந்நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 2ஆம் தேதி இஸ்தான்புல் நகரில் நடைபெற்ற கடைசி சுற்றுப் பேச்சுவார்த்தையில் உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ள மற்றும் காயமடைந்த சிறைக் கைதிகளை பரஸ்பரம் பரிமாறிக்கொள்ள ரஷ்யாவும் – யுக்ரைனும் சம்மதம் தெரிவித்திருந்தன.

<<<<>>>>

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் குடியுரிமை தொடர்பான போராட்டத்தை கட்டுப்படுத்த கூடுதலாக கலிஃபோர்னியா தேசிய பாதுகாப்புப் படையினர் 2 ஆயிரம் பேரை பணியமர்த்த அந்நாட்டு அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

லாஸ் ஏஞ்சல்சில் சட்டவிரோத குடியேற்றம் தொடர்பான போராட்டம் தொடர்ந்து வருவதால் பாதுகாப்பு அமைச்சகத்திற்கு திரு. ட்ரம்ப் இந்த உத்தரவைப் பிறப்பித்திருப்பதாக பெண்டகன் செய்தித்தொடர்பாளர் **Sean Parnell** சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

இதனிடையே கூடுதலாக பாதுகாப்புப் படையினரை அனுப்பும் நடவடிக்கை சட்டவிரோதமானது என்று கலிஃபோர்னியா மாகாண அரசு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது.

<<<<>>>>

சர்வதேச அணுசக்தி முகமை ஈரானுக்கு எதிராக, தீர்மானம் நிறைவேற்றினால் அதனை எதிர்கொண்டு பதிலளிக்க ஈரான் தயாராக உள்ளதாக அந்நாட்டு வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு. **Esmaeil Baghaei** தெரிவித்துள்ளார்.

டெஹ்ரானில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வியன்னாவில் நடைபெறும் ஐ.நா. அணுசக்தி கண்காணிப்பு அமைப்பின் கூட்டத்தில் ஈரானுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்ற வாய்ப்பிருப்பதாக கூறினார்.

அணு ஆயுதமில்லாத நிலையை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஈரான் தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டிருப்பதாகவும், சர்வதேச அணுசக்தி முகமையுடன் ஒத்துழைப்பை முன்னெடுத்துச் செல்ல ஈரான் விரும்புவதாகவும் திரு. **Esmaeil Baghaei** தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா உள்ளிட்ட மாநிலங்களிலும், வடகிழக்கு மாநிலங்களிலும் இன்று இடியுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடலோர மற்றும் உட்புற கர்நாடக மாநிலம், கேரளா, மாஹே, ஒடிசா, ராயலசீமா, காரைக்கால் உள்ளிட்ட இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

மேலும் மகாராஷ்டிர மாநிலத்தின் மத்தியப் பகுதியிலும், அந்தமான் நிகோபார் தீவுகளிலும், ஜார்கண்ட், சத்தீஸ்கர் மாநிலங்களின் ஓரிரு இடங்களிலும் அடுத்த இரு தினங்களுக்கு இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்று அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

தில்லி, ஹரியானா, சண்டிகர், ஜம்மு-கஷ்மீர், லடாக், பஞ்சாப், ராஜஸ்தான் மற்றும் உத்தரப்பிரதேசத்தில் வெப்ப அலை தொடரும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பிளாஸ்டர் ஆஃப் பாரீசில் தயாரிக்கப்பட்ட சிலைகளை எந்தவொரு இயற்கை நீர்நிலைகளிலும் கரைக்க அனுமதிக்க முடியாது என்று மும்பை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிளாஸ்டர் ஆஃப் பாரீஸ் மூலம் தயாரிக்கப்பட்ட விநாயகர் சிலைகளைக் கரைப்பதற்கான தடையை திரும்பப் பெறக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரித்த தலைமை நீதிபதி திரு. **Alok Aradhe**, நீதிபதி திரு. சந்தீப் அடங்கிய அமர்வு இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

<<<<>>>>

ஆசியக் கோப்பை கால்பந்து தகுதிச் சுற்று இறுதியாட்டத்தில் இந்தியா இன்று ஹாங்காங்கை எதிர்கொள்கிறது.

இப்போட்டி மாலை மணி 5.30க்கு தொடங்குகிறது.

நான்கு அணிகள் கொண்ட குரூப்-சி பிரிவில் முன்னணியில் உள்ள இந்தியாவும் - ஹாங்காங்கும் இறுதிச்சுற்றுக்கு முன்னேறின.

-------------

ஐ.சி.சியின் புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர்கள் பட்டியலில் இந்திய அணியின் முன்னாள் கேப்டன் மகேந்திரசிங் தோனி இடம்பெற்றுள்ளார்.

நெருக்கடியான தருணத்திலும் பதற்றமின்றி அணியை வழிநடத்தி வெற்றிக்கு கொண்டு செல்லும் தோனியின் திறமையைப் பாராட்டும் வகையில் அவர் ஐ.சி.சி. கௌரவ வீரர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தோனியுடன் ஆஸ்திரேலியாவின் மேத்யூ ஹைடன், தென்னாப்பிரிக்காவின் ஹஷிம் ஆம்லா உள்ளிட்ட 7 வீரர்கள் ஐ.சி.சி. கௌரவ வீரர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

-------------

இந்தியா – பெல்ஜியம் அணிகளுக்கு இடையேயான இரண்டாவது மகளிர் ஜூனியர் ஹாக்கிப் போட்டி இன்று நடைபெறுகிறது.

**Antwerp**–ல் இப்போட்டி இரவு 9 மணிக்கு நடைபெறுகிறது.

-------------

இத்தாலியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சின்மயா தேவ் - இத்தாலியின் **Alberto Morolli** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-3, 3-6, 10-8 என்ற செட் கணக்கில் இத்தாலியின் **Vito Dellelba – Fabio Varsalona** இணையை வென்றது.

------------

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் சேப்பாக் அணி 41 ரன் வித்தியாசத்தில் நெல்லையை வென்றது.

--------------

ப்ரோ லீக் ஹாக்கிப் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா – நெதர்லாந்திடம் 2-3 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது.

**<<<<The End>>>>**